Journal of Valartamil
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY
eISSN 2821-3157

# தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே சமூகச் சேவை கற்றல் வழி நெறிமிகு மாந்தரை உருவாக்குவதில் திருக்குறளின் பங்கு

# *The Role of Thirukkural in Developing Ethical Individuals Through Social Service Learning Among Primary School Students*

**Ramasamy Munusamy***

Sekolah Jenis Kebangsaan Tamil (SJKT) Taman Keladi, Sungai Petani, Kedah, Malaysia

***Corresponding author email: cikguramasamy@gmail.com**

**ARTICLE HISTORY**
Received: 24th March 2026
Revised: 3rd May 2026
Accepted: 15th June 2026
Published: 20th June 2026

**KEYWORDS**
திருக்குறள்
நன்னெறிக் கல்வி
தொடக்கப்பள்ளி
நடத்தை
நன்னெறிப் பண்பு

**ஆய்வுச் சுருக்கம் -** இந்த ஆய்வு தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே நன்னெறிப் பண்பை உருவாக்குவதில் திருக்குறளின் பங்கினை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. திருக்குறள் என்பது காலங்காலமாகப் பொருத்தமான உலகளாவிய நெறிமுறைகள் மற்றும் நன்னெறிப் பண்புகள் நிறைந்த ஒரு செவ்வியல் தமிழ் இலக்கியமாகும். இந்த ஆய்வு நேர்காணல், உற்றறிதல் மற்றும் குறிப்பேடு பகுப்பாய்வு முறைகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டது. இந்த ஆய்வில் பத்து மாணவர்கள் ஈடுபட்டனர். ஆய்வின் முடிவுகள், திருக்குறளைக் கற்பிப்பதன் வழி மாணவர்களிடையே சுறுசுறுப்பு, பொறுப்புணர்வு, நேர மேலாண்மை, மரியாதை செலுத்துதல் மற்றும் பிறர்நிலை உணர்தல் (empathy) போன்ற நன்னெறிப் பண்புகளை உருவாக்க உதவுகின்றது என்பதைக் காட்டுகின்றன. மேலும், சமூகச் சேவை கற்றல் அணுகுமுறையைப் பயன்படுத்துவது, கூட்டுப்பணி, சமூக ஒத்துழைப்பு, சமூக உதவி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற சமூக நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுவதன் மூலம் குறள்களின் பொருளை மாணவர்கள் ஆழமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. இது மாணவர்கள் தாங்கள் கற்ற நன்னெறிப் பண்புகளை அன்றாட வாழ்க்கைச் சூழலில் செயல்படுத்தவும் வழிவகுக்கிறது. தொடக்கப்பள்ளிகளில் நன்னெறிக் கல்வியை வலுப்படுத்த, சமூகச் சேவை கற்றல் கூறுகளுடன் பாடத்திட்டத்தில் திருக்குறளை முறையாக ஒருங்கிணைக்க இந்த ஆய்வு பரிந்துரைக்கிறது.

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

**ABSTRACT -** This study aims to examine the role of Thirukkural in developing ethical values among primary school students. Thirukkural is a classical Tamil literary work containing timeless and universally applicable moral principles and ethical virtues. Data were collected through semi-structured interviews, observation, and journal analysis. Ten students participated in this study. The findings indicate that teaching Thirukkural helps to cultivate ethical attributes such as diligence, responsibility, time management, respect, and empathy among students. Furthermore, the application of the service learning approach — through direct participation in social activities including cooperative work, community collaboration, community assistance, and environmental conservation — enables students to develop a deeper understanding of the couplets' meanings. This approach also guides students to apply the ethical values they have learned within everyday life contexts. The study recommends the systematic integration of Thirukkural into the curriculum, alongside service learning components, in order to strengthen moral education in primary schools.

***KEYWORDS:*** *Thirukkural, Moral education, Primary school Behaviour, Ethical values*

## முன்னுரை

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் ஓர் உன்னதமான படைப்பாகும். திருக்குறள் அறம், சமூகம், அரசியல் மற்றும் பொருளாதாரம் போன்ற வாழ்வின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய 1330 குறட்பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூல் அறம், பொருள் மற்றும் இன்பம் என மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருக்குறளின் மேன்மை அதன் உலகளாவிய நன்னெறிப் பண்புகளால் நிறைந்துள்ளது. இது சமய நம்பிக்கைகள், கலாச்சாரம் மற்றும் கால எல்லைகளைக் கடந்து, பல்வேறு கல்விச் சூழல்களிலும் ஆளுமை உருவாக்கத்திலும் இன்றும் பொருத்தமானதாக அமைகிறது.

நேர்மை, பொறுப்புணர்வு, அன்பு மற்றும் நீதி போன்ற குறளில் பொதிந்துள்ள நன்னெறிப் பண்புகள், இளைய தலைமுறையினரின் ஒழுக்க மற்றும் நெறிமிகு மாந்தர் உருவாக்கத்தில் ஒரு முக்கியமான வழிகாட்டியாக அமைகின்றன. சமூகச் சேவை கற்றல் (Service Learning) சூழலில், இந்த நன்னெறிப் பண்புகள் கூட்டுப்பணி, தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற சமூக நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு அடிப்படையாக அமைகின்றன. நன்னெறிப் பண்புகளை மாணவர்கள் வெறும் கோட்பாட்டு வழியே மட்டும் புரிந்துகொள்ளாமல், அவற்றை அன்றாட வாழ்க்கைச் சூழலில் நடைமுறைப்படுத்தவும் வழிவகுக்கிறது (Jeyamani, 2022; Ponniah & Safeek, 2023; Ramasamy & Vasanthan, 2023).

நன்னெறிக் கல்வி என்பது மாணவர்களின் ஆளுமை மற்றும் குணநலன்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், அவர்களின் கல்வி, மனநல மற்றும் சமூக வளர்ச்சியையும் முழுமையாகப் பாதிக்கிறது. திருக்குறள் போன்ற செவ்வியல் நூல்களைப் பயன்படுத்துவது, கதை சொல்லுதல், கலந்துரையாடல் மற்றும் பல்லூடகத் தொழில்நுட்பம், செய்யறிவு போன்ற ஆக்கப்பூர்வமான கற்பித்தல் முறைகளுடன் இணைக்கப்படும்போது, தார்மீக விழுமியங்களை அர்த்தமுள்ள வகையில் வழங்குவதற்கான ஒரு பயனுள்ள அணுகுமுறையாகக் கருதப்படுகிறது. இந்த அணுகுமுறை சமூகச் சேவை கற்றலுடன் ஒருங்கிணைக்கப்படும்போது, மாணவர்கள் நேரடி அனுபவக் கற்றல் (Experiential Learning) பெறுவதற்கான

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

வாய்ப்பைப் பெறுகிறார்கள் (Nirmala et al., 2025; Ponniah & Safeek, 2023; Nagarajan & Munisvaran, 2025; Sekar et al., 2021; Ramasamy & Vasanthan, 2023).

## ஆய்வுச் சிக்கல்

மாணவர்களிடையே மரியாதை, பொறுப்புணர்வு மற்றும் பிறர்நிலை உணர்தல் போன்ற பண்புகள் குன்றும்போது ஒழுக்கப் பிரச்சினைகள் அதிகரித்து வருவது பல்வேறு தரப்பினரிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. பள்ளிகளில் நன்னெறிக் கல்வி முறையாகக் கற்பிக்கப்பட்டாலும், பயன்படுத்தப்படும் அணுகுமுறைகள் பெரும்பாலும் மனப்பாடம் செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. நன்னெறிப் பண்புகளை உணர்வுப்பூர்வமாக உள்வாங்குவதற்கும் அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் குறைவான முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது.

சூழல் சாராத மற்றும் மாணவர்களின் உண்மையான அனுபவங்களின் அடிப்படையில் அமையாத நன்னெறிக் கல்வி கற்பித்தல், இக்குறைபாட்டின் முக்கிய காரணிகளில் ஒன்றாகும் என ஆய்வுகள் காட்டுகின்றன. இது நேர்மறையான நடத்தையை உருவாக்குவதில் நன்னெறிக் கல்வியின் செயல்திறனைப் பாதிக்கிறது (Sekar et al., 2021; Ramasamy & Vasanthan, 2023). எனவே மாணவர்களிடையே நன்னெறிப் பண்பை வலுப்படுத்துவதற்கு, உலகளாவிய அறநெறிகள் கொண்ட திருக்குறளைப் பயனுள்ள கல்வி ஆதாரமாகக் கொண்டு மாணவர்களின் வாழ்வில் நேரடியாகப் பயன்படுத்த முடிகிறது.

## ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வு தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே சமூகச் சேவை கற்றல் வழி நெறிமிகு மாந்தரை உருவாக்குவதில் திருக்குறளின் பங்கினை அடையாளம் காண மேற்கொள்ளப்படுகிறது.

## தொடர்புநூல் திறனாய்வு


திருக்குறள், கலாச்சாரம் மற்றும் சமயப் பின்னணிகளைக் கடந்து அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பொருத்தமான நூலாகும் (Jeyamani, 2022). இந்நூல் நேர்மை, அன்பு மற்றும் நீதி போன்ற உலகளாவிய தார்மீக விழுமியங்களைக் கொண்டுள்ளது. இந்த விழுமியங்கள் வெறும் கோட்பாட்டு ரீதியானவை மட்டுமல்ல, ஒழுக்கமான மற்றும் பொறுப்புள்ள தனிநபர்களை உருவாக்க அன்றாட வாழ்க்கையிலும் பயன்படுத்தப்படலாம். Ponniah et al. (2023) திருக்குறளை உணர்ந்து கற்பது மாணவர்களிடையே உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துகிறது என்று வலியுறுத்துகின்றனர்; குறிப்பாக அறநெறி சார்ந்த முடிவெடுத்தல் மற்றும் விழுமியங்களின் அடிப்படையிலான தீர்மானங்களை எடுக்க உதவுகிறது.

திருக்குறள் கற்பித்தலில் பல்லூடகம் பயன்படுத்துவது மாணவர்கள் தார்மீக விழுமியங்களைப் புரிந்துகொள்வதையும் உள்வாங்குவதையும் மேம்படுத்துகிறது (Nagarajan & Munisvaran, 2025). காட்சி, ஒலி மற்றும் பல்லூடகக் கருவிகளின் பயன்பாடு சுருக்கமான மற்றும் அடையாளப்பூர்வமான குறட்பாக்களின் பொருளை மாணவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது. அதேவேளையில், திருக்குறள் வழியாகத் தார்மீக விழுமியங்களைக் கொண்டுசேர்ப்பதற்குக் கதை சொல்லும் நுட்பம் ஒரு பயனுள்ள அணுகுமுறை என்று Sekar et al. (2021) வலியுறுத்துகின்றனர்; ஏனெனில் இது மாணவர்கள் அறநெறிக் கருத்துகளை நடைமுறை வாழ்க்கைச் சூழல்களுடன் தொடர்புபடுத்த வழிவகுக்கிறது.

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

சமூகச் சேவை கற்றல் சூழலில் சமூக நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடும்போது அவர்களின் நடத்தையை வழிநடத்தும் விழுமியங்களின் அடிப்படையாகத் திருக்குறள் திகழ்கிறது. பிறருக்கு உதவி செய்தல், சமூகப் பொறுப்புணர்வு மற்றும் பிறர்நிலை உணர்தல் போன்ற குறளில் பொதிந்துள்ள விழுமியங்கள், கூட்டுப்பணி, தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற சமூகச் சேவை நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் உண்மையான அனுபவங்களாக மாற்றப்படுகின்றன (Nagarajan & Munisvaran, 2025; Sekar et al., 2021; Ponniah et al., 2023; Ramasamy & Vasanthan, 2023).

படம் 1 நெறிமிகு மாந்தர் உருவாகுவதற்கான கருத்தை விளக்குகிறது. இது நெறிமிக்கப் பகுத்தறிவு (penaakulan moral), நெறிமிக்க உள்ளுணர்வு (emosi moral) மற்றும் நெறிமிக்க நடத்தை (perlakuan moral) எனப் படிப்படியாக வளரும் விழுமியங்களின் அடுக்குகளின் மூலம் உருவாகிறது. உள்வட்டம் அறநெறி சார்ந்த சிந்தனை மற்றும் உணர்வுகள் போன்ற அகநிலை அடிப்படைகளைக் காட்டுகிறது; வெளிவட்டம் ஒருவரின் செயல்களைப் பாதிக்கும் மனப்பான்மை, விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகளின் செயல்பாடுகளைக் குறிக்கிறது.




*[**படம் 1:** நெறிமிகு மாந்தர் உருவாக்கம் — ஆசிரியரால் வழங்கப்பட வேண்டும்]*

## ஆய்வின் நெறிமுறை

இந்த ஆய்வு சமூகச் சேவை கற்றல் நடவடிக்கைகளின் வழி தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே நெறிமிகு மாந்தரை உருவாக்குவதில் திருக்குறளின் பங்கினை ஆராய்கிறது. இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையைப் (qualitative approach) பயன்படுத்துகிறது. இந்த ஆய்வு வடிவமைப்பானது ஒரு தமிழ்த் தொடக்கப்பள்ளியில் நேர்வு ஆய்வு (case study) முறையில் நடத்தப்பட்டது. இதில் ஐந்தாம் ஆண்டு பயிலும் பத்து மாணவர்கள் ஆய்வு மாதிரிகளாக ஈடுபடுத்தப்பட்டனர்.

மூன்று முக்கியக் கருவிகள் பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டன: மாணவர்களின் கருத்துகளை நேர்த்தியாகப் பெற பகுதி கட்டமைக்கப்பட்ட நேர்காணல் (semi-structured interview); கற்றல் சூழலில் மாணவர்களின் உண்மையான நடத்தையை மதிப்பிட உற்றறிதல் (observation); ஆய்வின் கண்டுபிடிப்புகளை உறுதிப்படுத்தப் பணித்தாள்கள் மற்றும் மாணவர்களின் பிரதிபலிப்புகள் போன்ற

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

குறிப்பேட்டுப் பகுப்பாய்வு (journal analysis). சேகரிக்கப்பட்ட தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வு (thematic analysis) முறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வில் மூன்று சமூகச் சேவை கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன: (1) வழிபாட்டுத் தலங்களை (கோவில்) தூய்மைப்படுத்துதல்; (2) விளையாட்டு மைதானத்தைத் தூய்மைப்படுத்துதல்; (3) முதியோர் இல்லத்திற்குச் செல்லுதல். ஆறு வாரங்களாக தமிழ்மொழிப் பாடத்தில் திருக்குறளைச் செய்யறிவு வழிப் போதிக்கப்பட்டது.

### ஆய்வு தரவுகளின் பகுப்பாய்வு

### கருப்பொருள் 1: விடாமுயற்சி

வழிபாட்டுத் தலங்கள் (கோவில்கள்) மற்றும் விளையாட்டு மைதானங்களைத் தூய்மைப்படுத்துதல் போன்ற சமூகச் சேவை கற்றல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் மாணவர்களிடையே சுறுசுறுப்பு மற்றும் விடாமுயற்சி எனும் நன்னெறிப் பண்பினை வளர்க்க முடியும் என்பதைக் காட்டுகின்றன. நேர்காணல்களின் அடிப்படையில், சமூக நடவடிக்கைகளில் உண்மையான பொறுப்புகள் வழங்கப்பட்டபோது தாங்கள் அதிக சுறுசுறுப்பாக உணர்ந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர்.

> *"ஐயா எங்களைக் கோவிலைத் தூய்மைப்படுத்தச் சொன்னபோது, எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது, அதைச் சரியாகச் செய்ய விரும்பினேன்... சோம்பேறியாக இருக்கக்கூடாது." – மாணவர் 1*

உற்றறிதலின் (observation) வழி, மாணவர்கள் எவ்வித கட்டாயமுமின்றிப் பணிகளைச் செய்யும்போது மிகுந்த கவனத்தையும் ஈடுபாட்டையும் வெளிப்படுத்துவது கண்டறியப்பட்டது. வேலை சிறப்பாக முடிக்கப்படுவதை உறுதிசெய்ய அவர்கள் ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டனர். முக்கோணமுறை (triangulation) ஆய்விலும் பெரும்பாலான மாணவர்கள் சோம்பேறியாக இருக்கக்கூடாது என்றும் ஒவ்வொரு பணியிலும் முயற்சி செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தனர். இந்த நன்னெறிப் பண்பு அன்றாட வாழ்க்கையில் முயற்சி மற்றும் ஊக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் திருக்குறளின் போதனைகளுடன் முழுமையாக ஒத்துப்போகிறது.

### கருப்பொருள் 2: பொறுப்புணர்வு

விளையாட்டு மைதானத்தைத் தூய்மைப்படுத்துதல் மற்றும் முதியோர் இல்லத்திற்குச் செல்லுதல் போன்ற நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுவதன் மூலம் பொறுப்புணர்வு எனும் கருப்பொருள் தெளிவாகத் தெரிகிறது.

> *"அந்தப் பூங்காவை நம்முடைய இடத்தைப்போல நாம் பாதுகாக்க வேண்டும்... அது அழுக்காக இருந்தால், மற்றவர்களுக்கும் சிரமம் ஏற்படும்." – மாணவர் 3*

குப்பைகளைச் சேகரித்தல், இடத்தைச் சுத்தம் செய்தல் மற்றும் கட்டளை இடாமலே நண்பர்களுக்கு உதவுதல் போன்ற பணிகளை மாணவர்கள் முழு ஈடுபாட்டுடன் செய்வதை உற்றறிதல் வழி அறிய முடிகிறது. முதியோர் இல்லத்திற்குச் சென்றபோது மாணவர்கள் முதியவர்களுக்கு உதவியதுடன் மரியாதையுடன் பேசித் தங்கள் அக்கறையையும் பொறுப்புணர்வையும் வெளிப்படுத்தினர். நேர்காணல், உற்றறிதல் மற்றும் குறிப்பேடு பகுப்பாய்வு ஆகிய தரவுகளின் முக்கோணமுறை, இந்த நன்னெறிப் பண்பு திருக்குறள் போதனைகள் மூலம் வலுப்படுத்தப்படுவதைக் காட்டுகிறது.

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

**கருப்பொருள் 3: நேர மேலாண்மை**

இந்த ஆய்வில் நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்தல் ஒரு முக்கியமான கருப்பொருளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. சமூகச் சேவை கற்றல் நடவடிக்கைகளின் வழி, பணிகளை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் முடிப்பதற்காக நேரத்தை எவ்வாறு சிறப்பாக நிர்வகிப்பது என்பதை மாணவர்கள் கற்றுக்கொண்டனர்.

> *"நாம் தாமதப்படுத்தினால், வேலை முடியாது... எனவே நாம் வேகமாகவும் நேரத்தைச் சரியாகவும் பயன்படுத்த வேண்டும்." – மாணவர் 5*

மாணவர்கள் நேரத்தைப் பற்றி அதிக விழிப்புணர்வுடன் இருப்பதை உற்றறிதல் முடிவுகள் காட்டுகின்றன: முன்கூட்டியே வருதல், பணிகளை முறையாகப் பிரித்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைப்படி செயல்பாடுகளை முடித்தல். தரவுகளின் முக்கோணமுறை, நேரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் திருக்குறள் போதனைகள் சமூகச் சேவை கற்றல் நடவடிக்கைகளின் உண்மையான அனுபவங்கள் மூலம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதைக் காட்டுகிறது.

சுருங்கக் கூறின், நேர்காணல், உற்றறிதல் மற்றும் குறிப்பேடு பகுப்பாய்வு ஆகியவற்றின் முக்கோணமுறை மூலமான ஆய்வு முடிவுகள், சமூகச் சேவை கற்றல் வழியாகத் திருக்குறள் நன்னெறிப் பண்புகளைச் செயல்படுத்துவது மாணவர்களிடையே சுறுசுறுப்பு, பொறுப்புணர்வு மற்றும் நேர மேலாண்மை ஆகிய பண்புகளை நெறிமிகு மாந்தரின் நடத்தையாக வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது என்பதைக் காட்டுகின்றன.

**ஆய்வின் விவாதம்**

மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பொருத்தமான ஒவ்வொரு குறளிலும் உள்ள உலகளாவிய நன்னெறிக் கூறுகள் மூலம் நெறிமிகு மாந்தரின் நடத்தையை உருவாக்குவதில் திருக்குறள் ஒரு மிக முக்கியமான பங்கினை வகிக்கிறது என்பதை இந்த ஆய்வு நிரூபிக்கிறது. பொறுப்புணர்வு, பிறருக்கு உதவுதல், பிறர்நிலை உணர்தல் மற்றும் நேர்மை போன்ற நன்னெறிப் பண்புகள் வெறும் கோட்பாட்டுடன் மட்டும் புரிந்துகொள்ளப்படாமல், சமூகச் சேவை கற்றலில் மாணவர்கள் முறையாக ஈடுபடுவதன் மூலம் அவற்றை நடைமுறைப்படுத்த முடிகிறது.

இந்த ஆய்வு முடிவுகள், நன்னெறிப் பண்புகளின் அடிப்படையிலான கற்றல் மாணவர்களின் ஆளுமை மற்றும் ஒட்டுமொத்தத் திறனை மேம்படுத்தும் என்பதைக் காட்டும் முந்தைய ஆய்வுகளுடன் ஒத்துப்போகின்றன (Ponniah & Safeek, 2023). பல்லூடகக் கருவிகள், கதை சொல்லுதல் மற்றும் செய்யறிவு பயன்படுத்தும் கற்பித்தல் அணுகுமுறைகள் வழி மாணவர்கள் சிக்கலான நன்னெறிப் பண்புகளின் கருத்துகளைத் தெளிவாகவும் அர்த்தமுள்ளதாகவும் புரிந்துகொள்ள உதவுகின்றன (Nagarajan & Munisvaran, 2025). இந்த அணுகுமுறைகள் கூட்டுப்பணி, சமூக உதவி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற சமூகச் சேவை நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைக்கப்படும்போது, திருக்குறள் வழி கற்ற நன்னெறிப் பண்புகளை மாணவர்கள் அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் செயல்படுத்த முடிகிறது.

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

**பரிந்துரைகள்**

இந்த ஆய்வு ஆசிரியர்கள், பாடத்திட்டம் மற்றும் மாணவர்களுக்குச் சில முக்கியமான தாக்கங்களை வழங்குகிறது. ஆசிரியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் கதை சொல்லுதல், கலந்துரையாடல் மற்றும் பல்லூடகக் கருவிகள், செய்யறிவு போன்ற ஆக்கப்பூர்வமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும், நன்னெறிப் பண்புகள் ஆழமாகப் புரிந்துகொள்வதற்கும் உள்வாங்குவதற்கும் குறள்களை மாணவர்களின் அன்றாட வாழ்க்கைச் சூழல்களுடன் தொடர்புபடுத்தி கற்பிக்க வேண்டும்.

பாடத்திட்டத்தின் அடிப்படையில், திருக்குறளைக் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகளில் முறையாக ஒருங்கிணைக்க வேண்டியது அவசியமாகும். சமூகச் சேவை கற்றல் போன்ற பயன்பாட்டு அடிப்படையிலான நன்னெறிக் கல்வி அணுகுமுறைகளின் வழி மாணவர்கள் தாங்கள் கற்ற நன்னெறிப் பண்புகளை சமூகச் சூழலில் நேரடியாக நடைமுறைப்படுத்த வாய்ப்புப் பெறுவார்கள். சுருங்கக் கூறின், திருக்குறளைச் சமூகச் சேவை கற்றலுடன் இணைப்பது மாணவர்கள் நன்னெறிப் பண்புகளை வெறும் கோட்பாடுகளோடு மட்டும் புரிந்துகொள்ளாமல், அவற்றை நடைமுறை வழி செயல்படுத்த வழிவகுக்கிறது.

**முடிவுரை**

திருக்குறள் அதன் உலகளாவிய நன்னெறிப் பண்புகள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் எளிதாகப் பயன்படுத்தக்கூடிய தன்மையால் தமிழ்ப்பள்ளி மாணவர்களிடையே நெறிமிகு மாந்தர் நடத்தையை உருவாக்குவதில் ஒரு மிக முக்கியமான ஆதாரமாகத் திகழ்கிறது. கதை சொல்லுதல், கலந்துரையாடல் மற்றும் பல்லூடகக் கருவிகள், செய்யறிவு போன்ற பொருத்தமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவது மாணவர்களிடையே கற்றலின் செயல்திறனையும் நன்னெறிப் பண்புகளை உள்வாங்குவதையும் மேம்படுத்துகிறது.

திருக்குறளைச் சமூகச் சேவை கற்றல் அணுகுமுறையுடன் ஒருங்கிணைக்கும்போது, சமூக நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் மாணவர்கள் பிறர்நிலை உணர்தல், பொறுப்புணர்வு மற்றும் ஒத்துழைப்பு போன்ற நன்னெறிப் பண்புகளை அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் செயல்படுத்த வாய்ப்புப் பெறுகிறார்கள். எனவே நற்பண்பு, ஒழுக்கம் மற்றும் சமூகத்தின் மீது பொறுப்புணர்வு கொண்ட ஒரு தலைமுறையை உருவாக்குவதற்கு கல்வி முறையில் சமூகச் சேவை கற்றல் கூறுகளுடன் திருக்குறளை முறையாக ஒருங்கிணைப்பது அவசியமாகும்.

**REFERENCES**

Jeyamani, M. (2022). The moral life as shown by Thirukkural. International Research Journal of Tamil, 4(S-19), 187–190. https://doi.org/10.34256/irjt224s1928

Nagarajan, K., & Muniisvaran, K. (2025). Teaching Thirukkural to form 2 students through the Cognitive Theory of Multimedia Learning. Journal of Valartamil, 6(1). https://doi.org/10.37134/jvt.vol6.1.3.2025

Nirmala, M., Sheik Mohamed., Palani, S., & Sam Hermansyah. (2025). A study on the influence of moral education on students' academic achievement. Macca Journal of Linguistic Applied Research, 1(3). https://journal.adityarifqisam.org/index.php/macca/article/view/87

Ponniah, K., Sivanadhan, I., Muniswaran, K., Pooveneswaran, N., & Aigul Akhmetova. (2021). The use of ICT in Thirukkural teaching and facilitation. Journal of Hunan University Natural Sciences, 48(6), 122–129.

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

Ponniah, K., & Safeek, N. M. (2023). Exploring theoretical and conceptual frameworks for the enhancing of Higher-Order Thinking skills through the study of Thirukkural. International Journal of Academic Research in Progressive Education and Development, 13(2). https://ijarped.com/index.php/journal/article/view/496
Ramasamy, M., & Vasanthan, G. (2023). Pembentukan akhlak mulia murid sekolah rendah melalui pembelajaran khidmat masyarakat dalam Pendidikan Moral: Satu kajian kes. International Journal of Education, Psychology and Counselling, 8(50). https://gaexcellence.com/ijepc/article/view/3669
Sekar, V., Nachiappan, S., & Gengadaran, C. (2021). Analisis penerapan nilai murni melalui pengajaran karya Thirukural Bahasa Tamil dalam kalangan pelajar tingkatan empat. Muallim Journal of Social Sciences and Humanities, 5(3), 194–201. https://doi.org/10.33306/mjssh/152

## இணைப்பு: மாதிரி திருக்குறள்கள்

**அட்டவணை 1.** இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட திருக்குறள்கள் மற்றும் வெளிப்படும் பண்புகள்

| எண் | திருக்குறள் | பொருள் | வெளிப்படும் பண்புகள் |
|---|---|---|---|
| 1. | நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன். (605) | தாமதம், மறதி, சோம்பல், அதிக தூக்கம் இந்த நான்கும் வாழ்க்கையில் முன்னேற விரும்பாதவர்களின் குணங்களாகும். | சுறுசுறுப்பு, காலந்தவறாமை, கவனமுடைமை, நேர மேலாண்மை |
| 2. | ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும். (131) | ஒழுக்கம் ஒருவருக்கு உயர்வு, புகழ், மரியாதை ஆகியவற்றை அளிக்கிறது. அதனால் ஒழுக்கத்தை உயிரைவிடவும் மேலாகக் காக்க வேண்டும். | ஒழுக்கம், மரியாதை |
| 3. | இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாஅ தவர். (623) | துன்பம் வந்தபோது அதற்காக வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவர். | துணிவு, சுய மரியாதை |
| 4. | யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன். (341) | ஒருவன் எந்தப் பொருளிலிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ, அந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை. | பற்றற்ற நிலை, பிறர்நிலை உணர்தல் |
| 5. | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும். (50) | உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான். | ஒழுக்கம், மரியாதை |
| 6. | காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது. (102) | உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை அறிந்தால் உலகைவிட மிகப் பெரிதாகும். | காலந்தவறாமை, பிறர்நிலை உணர்தல், நேர மேலாண்மை |
| 7. | ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செய்தாருள் வைக்கப் படும். (214) | பிறருக்கு உதவி செய்யும் ஒப்புரவு என்னும் உயர்ந்த குணத்தைவிட உயர்வான ஒன்று இவ்வுலகிலும் விண்ணுலகிலும் இல்லை. | ஒழுக்கம், மரியாதை, பிறர்நிலை உணர்தல் |
| 8. | உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலார் தார். (140) | உலகத்தோடு பொருந்தி ஒழுகும் தன்மையை அறியாதவர் பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவர். | ஒழுக்கம், சுய மரியாதை, பிறர்நிலை உணர்தல் |
| 9. | நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல். (113) | தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போது கைவிட வேண்டும். | பற்றற்ட நிலை, பிறர்நிலை உணர்தல் |
| 10. | சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால் | முன்னே சமமாக இருந்து பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல்போல் ஒரு பக்கமாகச் | ஒழுக்கம், நடுவுநிலைமை, பிறர்நிலை உணர்தல் |

*continued*

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

| | | | |
|---|---|---|---|
| | கோடாமை<br>சான்றோர்க்கணி. (118) | சாயாமல் நடுவுநிலைமை<br>போற்றுவது சான்றோர்க்கு<br>அழகாகும். | |

https://doi.org/10.37134/jvt.vol7.1.6.2026
© 2026 Munusamy. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license